**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 36 /2024**

வாதி தரப்பு சாட்சியாக PW. 1 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜேஷ் | Father Name | : | வெங்கடாச்சலம் |
| Village | : | இனாம்கிளியூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | வழக்கறிஞர் |
| Religion | : | | Age | : | 46 |

**முதல் விசாரணை -**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். இவ்வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது தான். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு நிரூபண வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். கடந்த 03.06.1979 ம் தேதியிட்ட எனது தகப்பனாருக்கு பிச்சையம்மாள் எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்**, கடந்த 28.08.2015 ம் தேதியிட்ட வலங்கைமான் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய அடங்கல் **வா.த.சா.ஆ.2 ஆகவும்,** கடந்த 28.08.2015 ம் தேதியிட்ட வலங்கைமான் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கிய சிட்டா நகல் **வா.த.சா.ஆ.3 ஆகவும்**, கடந்த 03.07.2006 மற்றும் 16.03.2009 ம் தேதியிட்ட கிஸ்தி ரசீதுகள் முறையே **வா.த.சா.ஆ.4, வா.தா.சா.ஆ.5**

**ஆகவும்**, கடந்த 11.11.2019 ம் தேதியிட்ட கணினி வில்லங்கச்சான்று **வா.த.சா.ஆ.6 ஆகவும்**, கடந்த 17.10.2016 ம் தேதியிட்ட கேவியட் மனுவின் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.7 ஆகவும்**, கடந்த 04.01.2020 ம் தேதியிட்ட மதிப்பு வழிகாட்டுதல் கணினி நகல் **வா.த.சா.ஆ.8 ஆகவும்**, கடந்த 17.04.2006 ம் தேதியிட்ட திரு.வெங்கடாச்சலம் அவர்களின் இறப்புச் சான்றிதழ் கணினி நகல் **வா.த.சா.ஆ.9 ஆகவும்**, கடந்த 21.11.2009 ம் தேதியிட்ட திரு.வெங்கடாச்சலம் அவர்களின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் **வா.த.சா.ஆ.10 ஆகவும்**, வாதியன் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.த.சா.ஆ.11 ஆகவும்** குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டா மற்றும் அடங்கலை தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன். ( வழக்கு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.02.03 19:00:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.